ஜூலை 2000 மாண்பைக் காக்கும் மாத இதழ் ரூ. 3.00

www.padippakam.com

# மக்கள் களம்



"இனியும் நாங்கள் கொடுமைகளைச் சகித்துக் கொள்ள மாட்டோம்."
- இரட்டைமலை சீனிவாசன்

## அசிங்கத்தின் இலக்கணம் செங்கை அரசு மருத்துவமனை




படிப்பகம்

www.padippakam.com



நிறுவனர் ஐயா எல். யேசுமரியான் ஆரணி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்த காட்சி.

# விடிய விடிய



அல்லியாளமங்கலம் கிளையை துவக்கி வைத்த மாநில தலைவர் ப. அசோகன்.

# விடுதலை

25-06-2000 ஞாயிறு அன்று, திருவண்ணாமலை மாவட்டத்தின் பெரும்பகுதி அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரால் விழாக்கோலம் பூண்டது.

ஆரணி, போளூர், சேத்பட், பெரணமல்லூர் ஆகிய ஒன்றியங்களில் இருபதுக்கும் மேற்பட்ட புதிய கிளைகளை தன்னுடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டது அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்.

(தொடர்ச்சி பக்கம் -16 -ல்)



டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கிறார் மாநில ஆலோசகர் M. திருப்பதியான். இடம் : தேவிகாபுரம்.



படிப்பகம்

www.padippakam.com


**இனியொரு யுகம் செய்வோம்!**

*திட்டம்: 101*
*செயல்: 2*

நிறுவன - ஆசிரியர்

**எல். யேசுமரியான்**

ஆசிரியர் குழு

சிந்தை ராஜன்

விடுதலை நெஞ்சன்

பட்டி தமிழ்விரும்பி

உரிமை மற்றும் வெளியிடுபவர்

**ஜி. கோபிநாதன்**

67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை 600 021.

அச்சிட்டோர்

**நவஜோதி அச்சகம்**

சென்னை-600 002

படைப்புகள், சந்தா மற்றும் தொடர்புகளுக்கு :

**எம்.ஜெ. நாயகம்**

நிர்வாகி

21டி/1, திருக்கழுகுன்றம் ரோடு,
செங்கல்பட்டு-603 002.


# களம் காணும் நெஞ்சங்களே!



"கோடி" என்றால் அனைவரின் புருவங்களையும் உயர்த்தும். இச்சொல்லுக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து உள்ளதாக நினைப்பதுண்டு. ஆனால் சமீபத்தில் "கோடி" என்ற இவ்வார்த்தை கவலையையும், கரிசனையையும் எழுப்பியுள்ளது. உலக மக்கள் தொகை 600 கோடியை எட்டியிருக்கும் வேளையில் இந்திய மக்கள் தொகை 100 கோடியை அடைந்துள்ளது. இந்த நூறு கோடிதான் பலரின் கவலைக்கு காரணமாக உள்ளது.

மக்கள் தொகைப் பெருக்கம்தான் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாகவும், ஏழ்மைக்குக் காரணமாகவும் உள்ளது என்று சித்தரிக்கும் அறிஞர்களும், அரசியல்வாதிகளும் உள்ளனர். இது முழுமையான உண்மையல்ல, நிறைவான விளக்கமும் அல்ல. குழந்தைகள் நிறைந்த பெரிய குடும்பம் ஏழ்மையிலும், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளே உள்ள சிறிய குடும்பங்கள் வளமையிலும் வாழ முடியும் என்ற கருத்து பரவலாக்கப்பட்டுள்ளது.

எனவேதான், 'திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத குடும்பம்', 'நாமிருவர் நமக்கிருவர்' 'ஒன்று பெற்றால் ஒளி மயம், அதிகம் பெற்றால் அல்லல் மயம்' என்ற விளம்பரங்களெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. ஏன், குழந்தையே இல்லாமல் வாழ்வது வளமைக்கு வழிவகுக்கும் என்று 'நாமே இருவர், நமக்கேன் ஒருவர்' விளம்பரங்களும் செய்யப்பட்டன. இவைகளெல்லாம் எதார்த்தங்களைப் பிரதிபலிக்கின்றனவா?

1975-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதி நள்ளிரவில் மறைந்த பிரதமர் நேருவின் மகள் இந்திராகாந்தி அம்மையார் அவசர நிலை (Emergency) பிரகடனம் செய்தார். இந்த அவசர நிலை காலத்தில் அரசியல் சாசன ஜனநாயக உரிமைகளும் மனித உரிமைகளும் மிதிக்கப்பட்டன. எண்ணற்ற கொடுமைகள் அரங்கேற்றப்பட்டன. அவைகளில் முக்கியமானது ஒன்று "கட்டாய கருத்தடை" சிறுமி முதல் கிழவிவரை கட்டாயப்படுத்தி கருத்தடை செய்யப்பட்டனர். இக்கொடுமைக்கு பலியானோரில் பெரும்பாலோர் தலித் மக்களே.

இன்று இந்தியா "அவசரகால வெள்ளிவிழாவை" கொண்டாடுகின்றது. 25-ஆண்டுகளுக்கு முன்பாக கட்டாய கருத்தடை செய்யப்பட்டு ஒரு குழந்தையோடு, அல்லது குழந்தைகளேயின்றியும் வாழும் குடும்பங்களைச் சந்திக்கும்போது அவர்கள் வாழ்வு ஒளிமயமாக தெரியவில்லை. அதே ஏழ்மையிலும் சிலர் அதைவிட மோசமான நிலையிலும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

எனவே வறுமையை ஒழிப்பது வெறும் கருத்தடை மட்டுமல்ல. நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதும், சாதிய கொடுமைகளுக்கு சரியான தீர்வு காண்பதும், மதவாதத்தை அடியோடு கிள்ளியெறிவதும் திட்டமிட்டு செயல்படுத்தினால் ஒழிய வெறும் கருத்தடை திட்டங்கள் பலனளிக்கப் போவதில்லை. குடும்ப கட்டுப்பாடும், கருத்தடை திட்டங்களும் வளமைக்கு வழி வகுக்கும் என்றால் இத்திட்டங்களை ஏற்றுக்கொள்ளும் குடும்பங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலமும், பிறக்கும் ஒரே குழந்தைக்கு பணி உத்தரவாதத்தையும் மத்திய, மாநில அரசுகளால் வழங்க முடியுமா?

எனவே களத்திலுள்ளவர்கள் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தடை திட்டங்களைக்கூட நிலத்தோடு தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும். நிலமே பலம் என்பதுதான் நமது அடிப்படை தலித் தத்துவம். இதைத்தான் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கமும் முன்னிறுத்தி போராடி வருகின்றது.

*என்றும் களம் நிற்கும்.*

*எல். யேசுமரியான்*




படிப்பகம்


www.padippakam.com

# தலித் மக்களை தள்ளிவைக்கும் மீடியா

இந்திய நாட்டின் மிக உயர்ந்த பதவியில் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து கே.ஆர். நாராயணன் இருந்தாலும், அடிமட்டத்தில் இருக்கிற குப்பனும் சுப்பனும் அநியாயமாய்க் கொல்லப்படுகின்ற அவலத்தைத்தான் இன்னும் கண்டு கொண்டிருக்கிறோம். முப்படைக்குத் தளபதியான கே.ஆர். நாராயணன் படைகளை ஏவிவிட்டு நாட்டில் உள்ள எல்லா தாழ்த்தப்பட்ட மக்களையும் உயர்சாதி ஏவிவிடுகிற வன்முறைகளிலிருந்து காப்பாற்றலாமே. அது நிகழவில்லை என்பதுதான் மேலவளவில் நடந்த கொலையும், சமீபத்தில் புளியங்குடி கிராமத்தில் நடந்திருக்கிற கொலைகளும் நமக்குச் சொல்லுகின்றன.




இப்படி ஆங்காங்கு தலித் மக்கள் அநியாயமாய் கொல்லப்படுவது வாடிக்கையாகிவிட்டது. இப்படி நடந்தேறும் கொலைகள் பற்றி பல நேரங்களில் பத்திரிக்கைகள் தெளிவான செய்தியைத் தருவதில்லை. உண்மையை மறைக்க முயல்கின்றன. ஆளும் கட்சிக்கு தூபம் போடும் எல்லாப் பத்திரிக்கைகளும் அதனுடைய தர்மத்தைக் கூட மறந்து செயல்படத் துணிகின்றன. இதுதான் நடைமுறை எதார்த்தம். இந்திய நாட்டில் தலித் மக்கள் பல்முனை ஒடுக்குதலுக்கும், ஓரங்கட்டப்படுதலுக்கும் ஆளாவது எல்லோரும் அறிந்த விஷயம். இதில் பத்திரிக்கைகளும் மிக நுணுக்கமான வகையில் தலித் மக்களுக்கு எதிராகச் செயல்படுகின்றன அல்லது அவர்களுடைய போராட்டங்களையும், அவலங்களையும் உள்ளபடியே வெளி உலகுக்குச் சொல்லப் பயப்படுகின்றன.




தமிழ்நாட்டில் பரந்து விரிந்து கிடக்கும் எல்லா தலித் மக்களும் பாதிக்கப்பட்டாலும் பத்திரிக்கைகள் பவ்வியமாக மௌனம் காக்கும் என்றுதான் தெரிகின்றது. கொலைச் சம்பவங்கள் எங்கே யாருக்கு நடந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் அதை நாம் குரல் கொடுக்க வேண்டும், கண்டிக்க வேண்டும்.

ஆனால் பத்திரிக்கைகள் எடுக்கும் நிலைப்பாட்டை பார்த்தால் தலித் கொலை செய்யப்படும் போது ஒரு விதமாகவும் உயர் சாதியில் படித்தவர்கள் கொலை செய்யப்படும் போது வேறு விதமாகவும் உள்ளது. இது எந்த விதத்தில் நியாயமானது?

சென்னையில் எத்திராஜ் கல்லூரி என்பது உயர் சாதி மற்றும் கொஞ்சம் வசதி படைத்த பெண்கள் படிக்கும் கல்லூரி. சமீபத்தில் சந்தைக்கு வந்திருக்கும் உடைகளை அணிந்து கொண்டு, நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் மாணவிகளே இங்கு அதிகம். கல்லூரிக்கு வெளியே என்ன நடக்கிறது சாதாரண மக்கள் படுகின்ற கஷ்டங்கள் என்ன என்று கூட அறியாதவர்கள் இவர்கள். இந்தக் கல்லூரியைச் சார்ந்த ஜெயின் மதத்தைச் சேர்ந்த சரிகாஷா என்ற மாணவி ஆண்கள் விரட்டி ஆட்டோவிலிருந்து இறந்த செய்தியை எல்லோரும் அறிவோம். இவளின் இறப்பு என்பது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் பத்திரிக்கைகள் எல்லை கடந்து இந்தச் செய்தியை பூதாகரமாக்கியது. ஒவ்வொரு நாளும் சரிகாஷாவின் மரணம் பற்றி படத்துடன் புதிய புதிய தகவல்கள் கொடுத்தன. அரசியல் தலைவர்களின் இரங்கல் செய்தி இடைவிடாது வந்தன.






படிப்பகம்

www.padippakam.com

பெண்களை கேலி செய்யக்கூடாது என்பதற்கு புதிய சட்டம் வந்தது. பல பெண்கள் அமைப்புகள் சரிகாஷாவின் மரணத்தைக் கண்டித்து ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தின. பெரிய தலைவர்கள் எழுத்தாளர்கள் பெண்களை கேலி செய்தல் குறித்து சூடான விவாதத்தை நடத்தினார்கள்.

ஆனால் புளியங்குடியில், சென்ற மாதம் 26-ம் தேதி தலித் இளைஞர்கள் காந்தி, வெள்ளையன், மதியழகன் ஆகிய மூவரும் கழுத்து அறுபட்டு கொல்லப்பட்டிருக்கின்றனர். சினிமாப் பாணியில் சத்தமின்றி, ஆரவாரமின்றி இந்த அவலம் அரங்கேறியிருக்கிறது. ஒரு பெண் இறந்ததற்காக எவ்வளவோ கூச்சல் போட்ட பத்திரிக்கைகள் வெறும் செய்தியை மட்டுமே வெளியிடுகிறது. தலித் மக்களின் கொலைகள் பற்றி ஒரு விவாதம் நடத்தியிருக்கலாம். இதில் உயர்சாதி மக்களான வன்னியர்களின் கை எவ்வளவு இருக்கிறது. அரசு மற்றும் போலிஸின் நிலைப்பாடு என்ன என்றெல்லாம் செய்திகள் வெளியிடலாமே ஆனால் இது நடக்கவில்லை. எந்த இயக்கமும் கொலை செய்யப்பட்ட இந்த மூன்று இளைஞர்களுக்காக ஊர்வலமோ, கண்டனக் கூட்டங்களோ நடத்தவில்லை.




கொலை நடந்த அடுத்த சில தினங்களில் போலிஸ் நடந்துகொண்ட விதம் இன்னும் தலித் மக்களை மேலும் புண்படுத்தியுள்ளது. அப்பாவி இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதைக் கண்டு வெகுண்ட தலித் மக்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர். தார்மீகமாக அவர்கள் செய்தது சரியே. ஆனால் கொலை செய்த உயர்சாதி வன்னியர்களை கைது செய்யாமல், கல்லெறிந்தார்கள் என்ற பின்னணியில் தலித் இளைஞர்களை கைது செய்திருக்கிறது. வன்னியர்கள் வாழும் பகுதிகளில் கலவரம் ஏற்படக் கூடாது என்று முன்னெச்சரிக்கையாக போலிஸ் ஆட்களை குவித்துள்ளது அரசு. இதைப்பற்றியெல்லாம் ஏன் பத்திரிக்கைகள் செய்தி வெளியிடக் கூடாது. காரணம் அவர்கள் சார்ந்திருப்பது ஆளும் வர்க்கத்தையும், அதிகார வர்க்கத்தை மட்டும் சாதாரண மக்களை அவர்கள் ஒருபோதும் சார்ந்திருப்பதில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன் தர்மபுரியில் உயிரோடு எரித்துக்கொல்லப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவிகள் எல்லா தொடர்பு சாதனங்களிலும் அதிசியப்படும் வகையில் பேசப்பட்டார்கள். அதில் அரசியல் கட்சிகள் தலையீடு இருந்ததால் இன்னும் அதிகமாகவே முக்கியத்துவம் பெற்றது. அ.தி.மு.க -வின் தலையீடு இருப்பதால் தி.மு.க அதில் ஆதாயம் தேட எல்லா முயற்சிகளையும் எடுத்தது. தி.மு.க.வின் அரசியல் பலமாக இருக்கும் இந்த மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்ட படக்காட்சியை ஒவ்வொரு நாளும் செய்தியில் ஏதாவது ஒரு பகுதியில் காட்டியது. அதைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி அ.தி.மு.க வின் முகத்தை அசிங்கப்படுத்த வேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோள். செய்தித்தாள்களும் போட்டி போட்டுக்கொண்டு சூடான விவாதங்களையும், கருத்துக் கணிப்புகளையும் அள்ளி வீசின.

ஆனால் புளியங்குடி தலித் இளைஞர்கள் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தில் மட்டும் எல்லாம் உயர்சாதிக்காரர்களிடமும், பணக்காரர்களிடமும் குவிந்து கிடப்பதால் அவர்கள் எது சரி என்று நினைக்கிறார்களோ அதைப்பற்றி மட்டுமே பேசுவார்கள் என்பது உண்மை.

மேட்டுக்குடி சிந்தனையை எல்லோருடைய பொதுக்கருத்தாக மாற்றுவதற்கு முயல்வது இந்த தொடர்பு சாதனங்களே. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தலித் மக்கள் மேலே வருவதற்கு பலர் தடையாக இருக்கிறார்கள். தலித் மக்களுக்கு உதவ முன்வருவதில்லை. அவர்களுக்கு ஆதரவாக போலிஸ் இல்லை, அரசாங்கம் இல்லை, அரசியல் கட்சிகள் இல்லை. கடைசியில் தொடர்பு சாதனங்களும் இல்லை என்பதே மீண்டும் மீண்டும் நிரூபணமாகிறது. இவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.




அ. இருதயராஜ்



படிப்பகம்

www.padippakam.com



# ஸ்வஸ்திக் கோயில் வரவேற்கிறது



"வருக! வருக! உங்களை ஸ்வஸ்திக் கோயில் வரவேற்கிறது" என்று வரவேற்பு வளைவுகள் அமைக்கவும், பேனர்கள் கட்டவும் ஆர்.எஸ்.எஸ், பாஜக, பஜ்ரங்தளம், விஎச்பி கூட்டம் தயாராகி வருகிறது.

இது என்ன புதுக்கோயில் என்று கேட்கிறீர்களா? ஆம், புதுக் கோயில்தான். ராமன், கிருஷ்ணன், சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன், காளி, கருப்பன் என ஆயிரம் ஆயிரம் தெய்வங்களை வணங்குகிறார்களே இந்துக்கள். இனி இந்தத் தெய்வங்களையெல்லாம் ஒழித்து விட்டு இந்துக்கள் எல்லோருமாகச் சேர்ந்து வழிபட ஒற்றைத் தெய்வத்துக்கான கோயில் ஏற்பாடா இது?

இல்லவே இல்லை. பத்தோடு பதினொன்று என்பார்களே, அதுபோல பத்தாயிரத்தோடு இது ஒன்று என்ற வகையிலானதும் இல்லை.

இந்து மக்களை ஏமாற்றி, அவர்களின் வறுமையைப் பயன்படுத்தி, காசு பணம் கொடுத்து மதம் மாற்றி விட்டார்கள் என்று புலம்பி வந்த இந்து மதத் தலைவர்கள் ஒரிசாவில் சமீபத்தில் 72 குடும்பங்களை கிருத்துவ மதத்திலிருந்து இந்து மதத்துக்கு மாற்றினார்கள். இதற்கு விழா எடுக்கப்பட்டது. வேதங்கள் முழங்கப்பட்டன. மாற்று மதத்திலிருந்து வந்தவர்கள் புனிதமாக்கப்பட்டு இந்து மதத்தில் சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்கள். ஆனால் .........

இப்போது அவர்கள் இந்து மதம் என்றால் எந்தக் கோயிலுக்குப் போவது என்ற கேள்வி எழுகிறது. கிருத்துவ மதத்துக்கு மாறியவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களும் பழங்குடியினருமே. இவர்கள் மீண்டும் இந்து மதத்துக்கு வந்து விட்டார்கள் என்பதற்காக இவர்களை ராமன் கோயிலுக்குள்ளும் சிவன் கோயிலுக்குள்ளும் இன்னும் பலப்பல மேல் தட்டார் பூசிக்கும் கோயிலுக்குள்ளும் அனுமதிக்க முடியுமா?

முடியாது என்கிறார் பூரி சங்கராச்சாரியார் நீஷலானந்தா சரஸ்வதி. அவர்தான் ஸ்வஸ்திக் கோயில் யோசனையை முன் வைத்திருக்கிறார். மற்ற மதங்களிலிருந்து இந்துவாக மாறுவோர் வழிபடுவதற்கென்றே ஸ்வஸ்திக் கோயில்களை நாடு முழுவதும் கட்டலாம் என்று அவர் யோசனை கூறியிருக்கிறார். இந்தக் கோயில்களில் ஸ்வஸ்திக் சின்னம் இருக்கும். இது கடவுள்களின் தலைவரான கணபதியைக் குறிக்கும். அந்தக் குறியீட்டை இந்து மதத்துக்கு மாறியவர்கள் வழிபடுவதில் தவறில்லை என்று அவர் கூறுகிறார்.

வேறொரு மதத்திலிருந்து வந்தவர்களைக் கோயிலில் கூடச் சேர்க்காதவர்கள்தான்-நாம் எல்லோரும் இந்துக்கள் என்று ஒற்றுமை பேசுகிறார்கள். உண்மையில் முஸ்லிம் சமயம் முஜாஹிதீன்களை உருவாக்கி ஒதுக்கி வைப்பதுபோல், வேறு மதங்களிலிருந்து இந்து மதத்துக்கு வாருங்கள் வாருங்கள் என்று அழைத்து புதிய தீண்டாமையை உருவாக்கு கிறார்கள் இந்து சமயத் தலைவர்கள். இதற்குத் தான் ஆர்.எஸ்எஸ்சும் விஎச்பியும் துணை போகின்றன. இவர்களை அடையாளம் கண்டு கொள்வதும்-மக்களிடம் அம்பலப்படுத்துவதும் அவசியம்.

மயிலை பாபு

தகவல் ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ், 7-06-2000.



படிப்பகம்

www.padippakam.com

# எரிக்கும் அரசுத்துறை

நெருப்பு சுவாலை தன்னுடைய கோர முகத்தை காண்பித்து முப்பத்திமூன்று குடும்பங்களை நடுத்தெருவில் நிற்க வைத்துவிட்டது.

**13-06-2000** அன்று விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம் **"துறவி"** என்ற தாழ்த்தப்பட்ட கிராமத்தை தீ சுவாலை கண் இமைக்கும் நேரத்தில் சுட்டெரித்து நாசமாக்கிவிட்டு சென்றுவிட்டது. சாதி வெறிபிடித்த மனிதர்களை போலவே இந்த கொடிய தீ சுவாலையும் தாழ்த்தப்பட்ட மக்களை அழித்தொழித்த சோக காட்சிகள் நம் நினைவுகளை விட்டு நீங்காதவை.

வழக்கம்போலவே அன்றைய தினம் துறவி கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய பிழைப்பை தேடி வயல்களுக்கும், நகரத்திற்கும் சென்றுவிட்டனர். ஏறக்குறைய காலை 9.30 மணி திடீரென்று சுந்தரமூர்த்தி என்பவருடைய வீடு தீப்பற்றி எரிந்தது. நொடிப்பொழுதில் அடுத்தடுத்த 33 வீடுகளும் தீப்பற்றி எரிந்து சாம்பலானயின. இவை அனைத்தும் ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குள் நடந்து முடிந்துபோன அதிர்ச்சியான சம்பவங்கள்.

இந்த விபத்தில் சாம்பலாகிப்போன சொத்து மதிப்பு மட்டும் சுமார் ரூ.50 லட்சத்தை தாண்டுகின்றது. குருவிப்போல சிறுக சிறுக சேர்த்துவைத்த பணமும், நகைகளும், பித்தளை பாத்திரங்களும் அழிந்து போயின, மாற்றுக்கு துணிகூட இல்லாமல் நடுத்தெருவில் நிற்கின்றார்கள் இந்த மக்கள்.



எரிந்து சாம்பலாகிப்போன கோரக்காட்சி.

கஞ்சிக்கு வழியில்லாமல் காய்ந்து போயுள்ளனர். பசியின் கொடுமையை தாங்க முடியாமல் குழந்தைகள் அழுதபடியே இருக்கின்றனர்.

இக்கொடுமைகள் அரசு அதிகாரிகளுக்கு தெரிந்தும் கண்டுகொள்வதாக இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற ஏளனப்போக்கு விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அரசு அதிகாரிகளுக்கு மிகுதியாகவே உள்ளது.

சிறு துரும்புக்கூட மீட்கமுடியாமல் அனைத்தையும் இழந்துவிட்ட இம்மக்களுக்கு அரசு கொடுத்த நிவாரண நிதி எவ்வளவு தெரியுமா. வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே. தன்னுடைய மகளின் திருமணத்திற்கு கடன்பட்டு, நிலத்தை விற்று வாங்கி வைத்திருந்த நகைகளும், ரொக்க பணம் முழுவதும் சாம்பலாகிபோனதால் அக்குடும்பத்தினர் கதறி அழுவது இந்த அதிகாரிகளுக்கு எங்கிருந்து தெரியப்போகின்றது.

இந்த தீ விபத்து நடந்தது மக்களுடைய அஜாக்கிரதையால் அல்ல, மின்சாரத்துறையின் பொறுப்பற்ற தன்மையே இதற்கு காரணம். மின்சார கசிவினால் ஏற்பட்ட தீ விபத்தில் அப்பாவி மக்கள் துன்பப்படுவது எந்த விதத்தில் நியாயம்.

இந்த துயர சம்பவத்தை கேள்வியுற்ற அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிறுவனர் ஐயா எல். பேசுபரியான் மாநில தலைவர் ப. அசோகன் விழுப்புரம் மாவட்ட தலைவர் அய்யனார், செயலர் தலித் தாஸ் உட்பட மாநில நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும் துறவிக்கு விரைந்து சென்று ஆறுதல் கூறினர். வாழ வழியின்றி தவிக்கும் 33 குடும்பங்களுக்கும், குடும்பம் நடத்துவதற்கான தேவையான பொருட்களை வழங்கினர்.

விழுப்புரம் மாவட்ட செயலர் தலித் வி. தாஸ் "தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களை மாற்றான் தாய் பிள்ளைபோல் பாவிக்கின்றது. துறவி கிராமத்திற்கு உடனடியாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கவேண்டும். மெத்தனப்பேக்கு கடைபிடித்தால், விரைவில் விழுப்புரம் மாவட்டத்தை அதிரவைப்போம்" என எச்சரித்தார்.

- நமது நிருபர்.



பாதிக்கப்பட்டவர்களுக்கு அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் உதவிய காட்சி



படிப்பகம்

www.padippakam.com

# காஞ்சி மாவட்டத்தில்
# மாதிரியான - மாம்பாக்கம்.

இம்மக்களோ விவசாய கூலிகள். ஆனால் இவர்கள் வாழுகின்ற வாழ்க்கையோ நடுத்தர வர்க்க மக்களுக்கு சமமான வாழ்க்கை. கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்த மாற்றங்கள்தான் ஒவ்வொரு வருக்கும் சுமார் இரண்டு லட்சம் மதிப்புள்ள தளம் வீடு உட்பட பல முன்னேற்றங்கள். இவை சுற்று வட்டாரத்தில் பிற கிராம மக்களை திரும்பி பார்க்க வைத்தது போல நம்மையும் கவர்ந்தது!

மாம்பாக்கம். உத்திரமேரூர். தாலுக்காவிற்குட்பட்ட ஒரு குக்கிராமம் தாழ்த்தப்பட்ட மக்களே வசிக்கும் இக்கிராமத்தில் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வரையிலும் தளம் வீடு இல்லை. இந்த கிராமத்தை முட்செடிகள் ஆட்சி செய்தன. கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறாத நிலை.




எல்லம்மாள்

ஆனால் இன்றோ வேறு நிலை! மற்ற சமூகத்தினரும். அண்மை கிராமத்தினரும் இக் கிராம மக்களின் அபார வளர்ச்சியைக் கண்டு மூக்கின் மேல் விரல் வைக்கின்றனர். ஒரு சிலர் பொறாமைபடவும் செய்கின்றனர் நம்மையும் புளகாங்கிதம் அடையவைத்தது!

அதிசய வைக்கும் இக் கிராமத்தைக் காண நாமும் ஆவலுடன் நுழைந்தோம். இக்கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்களுடைய வேலைகளில் மும்முரமாக இருப்பதை நம்மால் காண முடிந்தது. சாதாரணமாகவே எந்த ஒரு கிராமத்திலும் மரத்தடியில் வெட்டிகதை பேசிக் கொண்டிருக்கும் பெரியவர்கள் கூட்டமோ. சாலையோரத்தில் வீண்கதை பேசிக்கொண்டு. வருவோர் போவோரை கிண்டல் செய்யும் இளைஞர் கூட்டமோ. மற்றவர்களைப் பற்றி புறம் பேசுகின்ற பெண்கள் கூட்டமோ இக்கிராமத்தில் பார்க்க முடியவில்லை.

இந்த மக்களின் வளர்ச்சிக்கு மூல காரணம் என்ன என்பதை பலரிடம் நாம் வினைவ அனைவரும் பணியாளர் சூசைராஜை கைகாட்டினர். உடனே நாம் பணியாளர் சூசைராஜ் அவர்களிடம் நம்மை



புதிதாக கட்டப்படும் வீடுகள்

அறிமுகப்படுத்திக் கொண்டு நாம் வந்ததற்கான காரணத்தையும் விளக்கினோம்.

நம்மை இன்முகத்துடன் வரவேற்ற அவர் "சார் நான் இந்த ஊருக்கு வந்து சுமார் எட்டு ஆண்டுகள் ஆகின்றன. நான் வந்த நேரத்தில் இங்குள்ள மக்கள் மிகவும் ஏழ்மைநிலையில் இருந்தாங்க. யாருக்கும் ஒழுங்கான வீடு கிடையாது. எங்க பார்த்தாலும் ஒரே முட்புதரும் சரியான சாலை வசதியும் கிடையாது. மழை பெய்தால் இந்த மக்கள் அவர்களுடைய வீட்டிலேயே இருக்க முடியாது கல்வியறிவும் அதிகம் கிடையாது வேலையில்லாத இளைஞர்களும் அதிகமாக இருந்தனர்".

"இவர்களின் இந்த நிலைமையை பார்த்த மற்ற சமூகத்தினர் இவர்களை மோசமாக பேசுவதும் நடத்துவ்தும் வாடிக்கை. ஒரு முறை பக்கத்து கிராமத்து மற்ற சமூகத்தைச் சார்ந்த ஒருவர் என் கண் முன்னாலேயே கொடுமை யான வார்த்தைகளால் திட்டியதும் இந்த மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதால் சாதி பெயர்ச் சொல்லி இழிவாக திட்டியதைக் கண்டு அதிர்ந்து போனேன். அன்றைய தினமே இந்த கிராமத்தை மாற்றி காண்பிக்க வேண்டுமென்று சபதமெடுத்தேன்".

மக்களின் இந்த நிலைமைக்கு காரணம் ஏழ்மை நிலைதான் என்று உணர்ந்தேன். பொருளாதாரத்தை மேம்படுத்த தி...



மீன் பண்ணை அமைக்கப்பட்டுள்ள இடம்



படிப்பகம்

www.padippakam.com



பணியாளர் சூசைராஜ

மிட்டேன். இதனால் பலவித சூழநிலைகளால் பிரிந்திருந்த மக்களை ஒன்றாக்கினேன். மக்களிடம் பலமுறை கூட்டம் போட்டு பேசினேன். என்னுடைய திட்டத்திற் கேற்றாற்போல மக்கள் சிறிது சிறித்தாக என்னுடன் ஒத்துழைக்க ஆரம்பத்தினர். இதன்பிறகு கிராம நிர்வாக குழு ஆரம்பிக்கப்பட்டது. கிராம வளர்ச்சிக்கு எந்தவொரு செயலை செய்வதாக இருந்தாலும் இந்த நிர்வாக குழுவில்தான் முடிவெடுப் பார்கள்" என கூறினார் பணியாளர் சூசைராஜ்.

"எட்டு வருஷத்தில் எங்களாலயே நம்ப முடியாத வளர்ச்சி நாங்க அடைஞ்சி இருக்கிறோம். நாங்கள்தான் எந்த சுகத்தையும் அனுபவிக்காம ஓட்டை குடிசைகளிலேயே வாழ்ந்துட்டோம். எங்க பிள்ளைகளாவது நல்லா கௌரவமா நாலு பேரு மதிக்கிற அளவுக்கு வாழணும்னுதான் பணியாளர் சூசைராஜ் கொடுத்த ஊக்கத்துல இவ்வளவு பெரிய வீட்டை கட்டியிருக்கிறோம். இதுபோல வீட்ட கட்டமுடியும்னு கனவுல கூட நாங்க நினைத்து பார்க்கல. எங்க கிராமத்துல எல்லோரும் ஒற்றுமையா இருந்து செயல்பட்டதாலதான் எங்களால இது சாதிக்க முடிந்தது என பூரிப்படைகிறார்" மாதர் சங்க தலைவி எல்லம்மாள்.

இந்த மக்களுக்கு இலவசமாகவோ. அரசு மானியத்திலோ வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை பெரும்பாலான பணத்தை இம்மக்களே செலவிட்டு கட்டியுள்ளனர். உத்திரமேரூர் வங்கியிலிருந்து தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய் கடன் வாங்கியுள்ளனர். அதையும் இன்னும் முழுவதுமாக வாங்கவில்லை. மற்றபடி இம்மக்களே பொதுவில் சேர்த்து வைத்திருந்த தொகை.

பணியாளர் சூசைராஜ் தனக்கு தெரிந்த நண்பர்களிடமும். ஒரு சில நிறுவனங்களிடமும் பெற்று சேர்த்த இருபதாயிரத்தையும் இவ்வீடு கட்டும் திட்டத்திற்கு செலவிட்டுள்ளார். வீடுகட்டுவதற்கு கூலி ஆட்களாக வெளியிலி ருந்து யாரையும் கொண்டுவரவில்லை. முழுக்க இவர்களுடைய உடல் உழைப்பிலேயே வீடுகள் கட்டப்பட்டன.

நிரந்தர வருமானம் இல்லாத சூழ்நிலையிலும் சொத்துக்கள் இல்லாத போதும் ஒவ்வொருவரும் வங்கியிலிருந்தும். வெளியாட்களிடமிருந்தும் வட்டிக்கு கடன் வாங்கி வீட்டை கட்டியுள்ள இக்கிராம மக்கள் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க என்ன வழி என நாம் ஆதங்கபட்டபோது



இயேசு நாதன்

சார். வாழ்க்கையில் ஒரு முறை தான் நாம் வீடு கட்டப் போறோம். நாங்க சம்பாதிக்கிறது கொஞ்சம்தான் இருந்தாலும். முறைப்படி சேர்த்து வைச்சா கண்டிப்பாக எல்லா கடனையும் அடைச்சிடுவோம்னு நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதிலேயும் ஒவ்வொருநாளும் வீணா செலவு செய்யறதையும் நிறுத்திட்டா எந்த ஒரு பிரச்சனையில்லாம கடனஅடைச்சிடலாம்" என நம்பிக்கையுடன் சொல்கிறார் இயேசுநாதன்.

வீடு கட்டி தரும் திட்டம் மட்டுமல்லாது. இம்மக்களின் சுயத் தொழில் செய்வதற்கு பல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துகிறார் பணியாளர் சூசைராஜ். சுமார் ரூபாய் இரண்டரை லட்சம். மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மீன் வளர்ப்பு பண்ணை இதற்கு சாட்சி. இப்பண்ணையை மக்கள் தங்கள் உடல் உழைப்பிலேயே அமைத்துள்ளனர். இதில் வரும் வருமானம் பொதுநிதியில் சேர்க்கப்படுகின்றது.

பொது நிலங்களையும். பம்ப் செட்டுக்களையும் இக்கிராமத்து மக்கள் பயன்படுத்த அனுமதித்துள்ளார். இதன்மூலம் வரும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு ஊர் பொது நிதியில் சேர்க்கப்படுகின்றது. இவ்வாறு பொது நிதியில் பல விதங்களில் பணத்தை சேர்க்கின்றனர். இந்தப் பொது நிதியிலிருந்து பெறப்படும் தொகையை அந்த கிராம மக்களின் படிப்பு வசதிக்கும். சாலைவசதி. தெருவிளக்கு. வசதி. குடிநீர் வசதிக்கு பயன்படுத்து கின்றனர்.

இதனால் இந்த கிராம மக்கள் ஒவ்வொரு



உயர்நிலைப்பள்ளி கட்டிடம்

13ம் பக்கம் பார்க்க.



படிப்பகம்

www.padippakam.com



*- சிந்தை. ஆர்.*

# அசிங்கத்தின் இலக்கணம் அரசு மருத்துவமனை

விலைமதிக்கமுடியாத மனித உயிர்களோடு விளையாடுவது இங்குள்ள அரசு மருத்துவர்களுக்கும், மற்ற பணியாளர்களுக்கும் கைவந்த கலை. ஊழலையும் இந்த மருத்துவமனையையும் பிரிக்கவே முடியாது என்ற பல குற்றச்சாட்டுக்கள். இவை செல்கல்பட்டு அரசினர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்தே வந்த தகவல்கள். இத்தகவல்களை ஆபரேஷன் செய்து பார்த்தோம்.

வட தமிழ்நாட்டில் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை பெரியதும், குறிப்பிடத்தக்கதும் ஒன்று. சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இம் மருத்துவமனைக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான புற நோயாளிகள் வந்து செல்கின்றனர்.

மருத்துவமனையை சுற்றி வலவந்தவுடன் நாம் புரிந்து கொண்டது சுகாதாரத்திற்கும், இந்த மருத்துவமனைக்கும் வெகுதூரம். புறநோயாளிகளும், உள் நோயாளிகளும் படும் இன்னல்களும் புலம்பல்களும் மருத்துவமனை நிர்வாகத்தின் லட்சணத்தை உணர வைத்தன.

அவசர சிகிச்சைப்பிரிவு, குழந்தைகள் மருத்துவம், இருதயநோய்ப் பகுதி, நரம்பியல் பகுதி, அறுவை சிகிச்சை பிரிவு உட்பட முக்கியமான 20 பிரிவுகள் உள்ளன. இங்கு 180 மருத்துவர்களும், 147 செவிலியர்கள், 250 இதர பணியாளர்களும் பணிபுரிகின்றனர். தாம்பரம், விழுப்புரம், வந்தவாசி, காஞ்சிபுரம், மகாபலிபுரம், செய்யூர், மரக்காணம் , திண்டிவனம், திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலிருந்து இம்மருத்துவமனைக்கு நோயாளிகள் குவிகின்றனர். தேசிய நெடுஞ்சாலையில் சாலைவிபத்துக்களில் படுகாயம் பட்டவர்களையும், உயிருக்கு போராடுபவர்களையும் இம்மருத்துவ மனைக்கே தூக்கி வருகின்றனர்.

நோயாளிகள், நோய் தீர்ந்துவிட வேண்டும், எப்படியாவது உயிர்பிழைத்து விட வேண்டும் என நம்பிக்கையோடு வருகின்றார்கள். நாளுக்கு நாள் இம்மருத்துவமனையில் அதிகரிக்கும் இறப்பு மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, மருத்துவகல்லூரி முதல்வரை சந்தித்து விவரம் அறிய விரும்பினோம். முதல்வர் சீனிவாசன் எந்த நேரமும் குடிபோதையிலே தான் இருப்பவர்! இவருடைய பொறுப்பின்மையாலும், அஜாக்கிரதையாலும், குடிபோதையாலும் மருத்துவமனை நிர்வாகம் கெட்டு சீரழிந்து போயுள்ளது என பலரும் நம்மிடம் தெரிவித்து அதிரவைத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

சமீபத்தில் அமைச்சர் க. சுந்தரம் அவர்களும், மாவட்ட ஆட்சி தலைவரும் இம்மருத்துவமனையை பார்வையிட வந்தபோது முதல்வர் முழு குடிபோதையில் இருந்ததாகவும் நமக்கு தெரிந்த வருவாய்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சமீபத்தில் முதல்வரின் பணிகளைப்பற்றி....

முதல்வரின் நிர்வாகத்தில் உள்ள முக்கியமான சில துறைகளைப்பற்றி அறிய நம் மூக்கை நுழைத்தோம்.

இம்மருத்துவமனைக்கு வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உள்ளன. ஆனால் புறநோயாளிகளை கவனிப்பதற் கான நேரம் காலை 7.00 மணியிலிருந்து 10 மணி வரை மட்டும்தான்! இதனால் வெகுதொலைவில் இருந்து வருகின்ற நோயாளிகள் சிறிது நேரம் தாமதமாக வந்தால் கூட திரும்பிபோக வேண்டிய நிலைமை தான். "உயிருக்கே ஊசலாடினால் கூட நாளைக்கு வா பார்த்துக்கொள்ளலாம்" என்பார்கள்.

மாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை கண்டிப்பாக புறநோயாளிகள் பிரிவு இயக்கப்பட வேண்டும். ஆனால் இம்மருத்துவமனையில் இந்த மாலை நேர புறநோயாளிகள் பிரிவு இயக்கப்படாமலே உள்ளது.

"நாங்க சொல்றதையும் கண்டுக்காம உடனே மாத்திரை மருந்து எழுதி கொடுக்கறாங்க எதுக்குனு எங்களுக்கே புரிவதில்லை" என பலமுறை இம்மருத்துவமனைக்கு படையெடுத்து வெறுத்து போன ஒருவர் நம்மிடம் புலம்பினார். பெரும்பாலான மருத்துவர்கள் நோயாளிகளுக்கு எந்த வியாதியாக இருந்தாலும் பேராசிட்டமல், விட்டமின் "சி" மட்டுமே எழுதி கொடுப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தோம்.

இந்த புறநோயாளர் பிரிவில் கண்டிப்பாக எம்.டி. தகுதியுடைய மருத்துவரை நியமிக்க வேண்டும் என்பது விதி. ஆனால் இங்கு எம்.பி.பி.எஸ் முடித்தவர்களே பணியாற்றுகிறார்கள்.


ஒரு மருத்துவமனையில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது அவசர சிகிச்சை பிரிவு. இதில் கண்டிப்பாக ஒரு பொது மருத்துவரும், உதவி அறுவை சிகிச்சை நிபுணரும் மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணரும் இருந்தாக வேண்டும். ஆனால் பெரும்பாலும் இம்மூவரும் இந்த பகுதிக்கு வருவதே கிடையாது என மருத்துவமனை பணியாளர் ஒருவர் நம்மிடம் கூறினார். சாலை விபத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டவரோ, விஷம் குடித்தவர், பாம்பு கடித்தவர் என அபாய கட்டத்தில் உள்ள எவர் இங்கு வந்தாலும் இந்த பிரிவில் உள்ள மருத்துவர்கள் அலட்டிக்கொள்வதே கிடையாது. வழக்கமாக செய்யக்கூடிய முதலுதவிக்கூட செய்வது கிடையாது.

பெரும்பாலும் இப்பிரிவில் மருத்துவகல்லூரி பயிலும் பயிற்சி மருத்துவர்களே உள்ளனர். இதனால் பல இழப்புகள் நிகழ்கின்றன. **மிக எளிதாக காப்பாற்றப்பட வேண்டிய உயிர்களையெல்லாம் அநியாயமாக கோட்டை விட்றாங்க இந்த பிரிவில் இருக்கிற மருத்துவர்கள் சில சமயங்களிலே ஒரே நேரத்தில் பல விபத்து கேஸ்கள் வந்தாலும், ஒரு உயிரைக்கூட இவர்கள் காப்பாற்ற மாட்டார்கள். ஆனால் உயிர் போன பிறகு சிகிச்சை அளித்ததாக துல்லியமாக அறிக்கை தயார் செய்து விடுகின்றார்கள்"** என நமக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

மருத்துவமனையில் உள்ள மிக முக்கியமான இருதநோய் பிரிவில் காலெடுத்து வைத்தோம். இம்மருத்துவமனையில் உள்ள இந்தப் பிரிவுக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகம். ஆனால் இந்த துறை துவங்கப்பட்டதிலிருந்து இன்று வரை உறக்கத்தில் இருந்து வருகின்றது. இத்துறையைப்பற்றி விவரமறிந்த ஒருவர் "சார் இந்த பிரிவுல பல லட்சங்கள் மதிப்புள்ள எக்கோ மற்றும் டி.எம்.டி. இயந்திரங்கள் பல வருடங்களாக பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. இதே போல மற்ற சில முக்கியமான இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் பழுது பார்க்கப்படாமலேயே உள்ளன. இத் துறையின் தலைமை மருத்துவர் இந்த பக்கம் தலை வைத்துக்கூட படுப்பது கிடையாது. இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த துறையையே இழுத்து மூடிவிட வேண்டியதுதான்" என கோமாவில் கிடக்கும் இந்த துறையைப்பற்றி அடுக்கினார்.

இங்கிருந்து மருத்தவமனையில் மற்றொரு முக்கிய பிரிவான அறுவை சிகிச்சை பிரிவிற்கு நகர்ந்தோம். மருத்துவமனையிலேயே எந்நேரமும்

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)



விலையுயர்ந்த பல இயந்திரங்களை உள்ளடக்கிய படத்தில் காண்பது போன்ற 3 வாகனங்கள் பயன் படுத்தபடாமலேயே பழுதடைந்த நிலையிலேயே உள்ளது. ஒரு வாகனத்தின் மதிப்பு ரூ. 15 லட்சம்.



படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் சட்டத்திற்கு அறுவை சிகிச்சை

நமது அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்ய முன்வந்துள்ளது பா.ஜ.க. அரசு இந்நிலையில் இச்சட்டத்திலுள்ள சில அம்சங்களை தெரிந்துகொள்வது அவசியம். இந்த அம்சங்கள் மாற்றப்படவேண்டுமா?

20(1) அமலில் உள்ள ஒரு சட்டத்தின்படி குற்றம் எனக் கருதப்படும் செயலுக்காக அத்தகைய சட்டத்தை மீறி செய்ததற்காக அன்றி, எந்த நபரும் தண்டிக்கப்படக்கூடாது. அத்தகைய குற்றத்திற்காக அமலில் உள்ள சட்டப்படி விதிக்கப்படவேண்டிய தண்டனையைக்காட்டிலும் அதிகமான தண்டனையை அந்த நபருக்கு விதிக்கக்கூடாது.

(2) ஒரு குற்றத்திற்காக ஒரு நபரை ஒரு தடவைக்கு மேல் குற்றம் சாட்டி தண்டிக்கக் கூடாது.

(3) குற்றம் சாட்டப்பட்ட எந்த நபரையும் தமக்கு எதிராக தாமே சாட்சியம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது.

21. சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள விசாரணை முறைப்படியன்றி வேறு எந்த விதமாகவும் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும், உயிரையும் பறிக்கக்கூடாது.

22(1) கைது செய்து ஒரு நபரை காவலில் வைப்பதற்கு முன், அவர் எதற்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்பதற்கான காரணத்தை அவருக்கு தெரிவிக்கவேண்டும். மற்றும் தம்மால் தேர்ந்தெடுக்கப்படும் வழக்குரைஞரைக் கலந்தாலோசிக்கவும் அவரை தமது தற்காப்பிற்கு பயன்படுத்துவதற்கும் அவருக்குள்ள உரிமை மறுக்கப்படக்கூடாது.

(2) ஒரு நபரை கைது செய்து காவலில் வைக்கும்போது அப்படிக்கைது செய்யப்பட்ட நபரை கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அருகாமையில் உள்ள ஒரு குற்றவியல் நடுவரிடம் முன்னிலைப்படுத்தவேண்டும். அந்த 24 மணி காலக்கெடுவில் கைது செய்யப்பட்ட இடத்தில் இருந்து அந்த குற்றவியல் நடுவர் இருக்கும் இடத்திற்கு அழைத்துச்செல்ல தேவைப்படும் பயண நேரத்தை சேர்க்கக்கூடாது. எந்த நபரையும் ஒரு குற்றவியல் நடுவரின் உத்தரவின்கீழ் அன்றி அந்தக் காலக்கெடுவுக்கு மேல் காவலில் வைத்திருக்கக்கூடாது.

(தொடரும்)

வழக்குரைஞர் - பழனிச்சாமி, செங்கை.

## அரசமைப்புச் சட்டத்தில் தேவைப்படும் மாறுதல்களை பொதுமக்கள் கூறலாம்

அரசமைப்புச் சட்டத்தில் தேவைப்படும் மாறுதல்கள் என்னவென்று பொதுமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புகள் ஆகியவை கருத்து தெரிவிக்கலாம்.

அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பில் மாறுதல் செய்யக் கூறும் யோசனைகள் ஏற்கப்பட மாட்டாது. அதே போல தாழ்த்தப்பட்டோர், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள் ஆகியோர் இதுவரை அனுபவித்து வரும் சலுகைகள், உரிமைகள் ஆகியவற்றை ரத்து செய்யக்கோரும் யோசனைகளும் ஏற்கப்பட மாட்டாது. அதே வேளையில் இப்பிரிவினருக்குக் கிடைக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் வலுப்படுத்தும் யோசனைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருத்தம் தேவைப்படும் 10 முக்கிய பிரிவுகளை, அரசமைப்புச்சட்ட திருத்தத்துக்கான தேசியக் கமிஷன் அடையாளம் கண்டு 10 உறுப்பினர்களின் தலைமையில் குழுக்களை நியமித்து, அக்குழுக்கள் மக்களிடம் கேட்க வேண்டிய கேள்வித் தொகுப்புகளை இறுதி செய்துவிட்டன. அவை விரைவிலேயே மக்களிடம் தரப்படும். அதை நிரப்பியும் மக்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரியப்படுத்தலாம்.

இந்த யோசனைகள் அனைத்தும் ஜூலை 31-க்குள் கமிஷனின் செயலருக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டதிருத்த தேசியக் கமிஷன், விக்யான் பவன் இணைப்புக்கட்டிடம், மௌலானா ஆசாத் சாலை, புதுதில்லி-110011 என்ற முகவரியில் அலுவலகம் செயல்படுகிறது. கமிஷனின் செயலராக ரகவிர் சிங் பதவி வகிக்கிறார். கமிஷனின் அலுவலகத்துக்கு இயக்குநரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இணை தள முகவரி : **http/ncrwc.nic.in.**

ஈமெயில் முகவரி : **ncrwc.nic.in.**

- தினமணி (17-06-2000)



படிப்பகம்

ம் பக்கத் தொடர்ச்சி
www.padippakam.com



ளைஞர்களின் முன்னேறறத்திற்காக கட்டப்பட்ட கடைகள்

அடிப்படை வசதிகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது கிடையாது.

கல்வியறிவு மந்தமாக காணப்பட்ட இந்த கிராமத்தில் இப்பொழுது முதுநிலை பட்டதாரி ஒருவரும். இளநிலைபட்டதாரி 5 நபர்களும். செவிலியர் இரண்டு பேரும் பாலிடெக்னிக் முடித்தவர் மூன்று நபர்கள். ஐ.டி.ஐ முடித்தவர் 6 நபர்கள். கணிப்பொறி முடித்தவர்கள் 2 நபர்களும் உருவாகி உள்ளனர்.

ஆரம்ப பள்ளியே சரிவர இயங்கப்படாத இக்கிராமத்தில் இன்று பணியாளர் சூசைராஜ் அவர்களின் முயற்சியினால் உயர்நிலைப்பள்ளி வரை உயர்ந்துள்ளதுதான் நம்மை அதிசயக்க வைக்கின்றது.

பொது இடத்தில் கடைகள் கட்டப்பட்டு வேலையில்லாத இளைஞர்கள் சிறு முதலீட்டில் பல்வேறுபட்ட தொழில்கள். வியாபாரம் செய்தவற்கும் ஊக்கமளிக்கப் பட்டுள்ளது.

கிராமமே ஓர் அமைப்பாக செயல் படுவதால் தான் ஒவ்வொன்றையும் எங்களால் சாதிக்க முடிகின்றது என சொல்கிற பணியாளர் சூசைராஜ் **இக்கிராமத்தில் ரசிகர் மன்றங்களோ, அரசியல் கட்சிகளோ, இல்லாததுதான் எங்களுக்கு பெரிய பலமாக உள்ளது** எனவும் மறக்காமல் எடுத்துரைத்தார்.

தீண்டாமை கொடுமையால் பாதிக்கப் பட்டிருந்த இம்மக்கள் இன்று பொருளாதார வளர்ச்சி கண்டவுடன் மற்றவர்களால் சமமாக மதிக்கப்படுகின்றார்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென்றால் வெறும் கோஷம் போடுவதாலும். கொடிபிடிப்பதாலும். இலவசங்களாலும் மட்டும் முடியாது. மாறாக கண்டிப்பாக அவர்கள் பொருளாதாரத்தில் அந்தஸ்து பெறவேண்டும். கட்டாய கல்வியறிவு பெற வேண்டும். அதைவிட முக்கியமாக சேமிப்பு செய்து வாழவேண்டும். தாழ்வு மனப் பான்மையிலிருந்து விடுபட வேண்டும் என அறுதியிட்டு கூறுகிறார் சூசைராஜ்.

அரசு ஓரளவேனும் தங்களுக்கு ஒத்து ழைப்பு கொடுத்தால் எங்கள் கிராமம் தமிழகத் தில் ஒரு முன் மாதிரியான கிராமமாக திகழும் என மக்கள் கூறுகின்றனர். நாமும் அதை நம்பு கின்றோம்.

– வெளவால்

# எச்சரிக்கிறோம்...

தலித்தை...
தொட்டாலே தீட்டு என்று
தூரப்போகும் துஷ்டனே
தலித் பெண்களை தொட்டு
கற்பழிக்கும் போது
தீட்டு உன்னை தீண்டவில்லையா?

ஜாதி வெறி பிடித்த சண்டாளனே!
உன் காமப்பசிக்கு
என் இனப்பெண்கள்தான் இரையோ?
உன் வர்க்கப் பசிக்கத் தீனி
தேடிக்கொள்ள வேறு இனம் இல்லையோ?

பசுத்தோல் போர்த்திய புலிகளே!
கற்பழிப்பால் கசக்கி எறியப்பட்ட
தலித் பூக்களெல்லாம் – தலித்
விடுதலைக்கு வித்திட்ட
விடியல் பூக்கள் என்பதை
மறந்து விடாதே! மறந்தும் இருந்துவிடாதே!!

மனிதாபிமானம்! அது என்ன?
கேள்வி கேட்கும்
ஈனர்களே! கயவர்களே!
தலித் பெண்கள் சிறிய விதைதான்
ஆனால்!
அவர்களுக்குள் ஒளிந்திருக்கின்றது
விடுதலை என்னும் பிரம்மாண்டமான மரம்
பாறைகளை பிளந்துச் செல்லும் சக்தி
இம்மரத்தின் வேர்களுக்கு உண்டு என்பது
உன் நினைவில் இருக்கட்டும்!!

இனியொரு முறை...
கற்பழிப்புப் பட்டியலில்
சரிதாவோ, சித்ராவோ இடம் பெற்றால்....
தொட்ட உன் கரங்கள்
வெட்டப்படும் என்பது நிச்சயம்!!
**எச்சரிக்கை.**

வளன் இல்லம்,
சீனிவாச நகர்.


படிப்பகம்

பரபரப்பாக இயங்கி கொண்டிருப்பதும் இந்த பிரிவே. ஆனால் இந்த பிரிவில் நடக்கும் கொடுமை ஏராளம். அறுவை சிகிச்சை நிபுணர் தயார் நிலையில் இல்லாததால் உடனடி மருத்துவம் செய்யப்படுவதில்லை. அறுவை சிகிச்சைக்கு தேவையான முக்கியமான இயந்திரங்கள் கிடையாது.

இங்கு இன்பூயஷன் பம்ப், ஆக்ஸிஜன் சிலிண்டர், பெட் சைடுமானிட்டர் போன்றவைகள் முக்கியமானவை. ஆனால் இவை அனைத்தும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன. இந்த பிரிவில் கண்டிப்பாக குளிர்சாதன வசதி செய்யப்பட வேண்டும். ஆனால் அந்த வசதியும் கிடையாது. இந்த பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட குளிர்சாதன பெட்டிகள் முதல்வரின் அறையிலும், வீட்டிலும் பொருத்தப்பட்டுள்ளன.

இப்பிரிவிற்கு தலை மருத்துவர் மட்டுமல்லாது, இருதயநோய் மருத்துவரும் கண்டிப்பாக போடப்பட வேண்டும். ஆனால் இதைப்பற்றி கண்டு கொள்வதே கிடையாது. மிக மிக சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டிய இந்த இடம் சுகாதார சீர்கேட்டால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றது. இப்பிரிவில் உயிர் காக்கும் அவசர மருந்துகளும் தயார் நிலையில் இல்லாததால் இங்கும் இறப்புகளின் எண்ணிக்கை மிக அதிகம். இந்தப் பிரிவில் மிக முக்கியமாக தேவைப்படுகின்ற மயக்க மருத்துவர் கிடையாது என்பதை அறிந்து அதிர்ந்து போனோம்.

அடுத்ததாக மகப்பேறு மருத்துவமனையை எட்டிப்பார்த்தோம். நமக்கு ஒரே அதிர்ச்சி! குப்பை தொட்டிக்கும், இந்த பிரிவிற்கும் வித்தியாசமே கிடையாது. கண்ணை கட்டி விட்டு இப்பகுதியில் விட்டால் சரியாக இப்பகுதியை கண்டுபிடித்து விடலாம். அந்த அளவிற்கு துர்நாற்றம் குடி கொண்டுள்ளது.

*இந்தப் பிரிவில் பச்சிளங் குழந்தைகளோடு ஆங்காங்கே நாய்களும், பூனைகளும் படுத்துக்கொண்டிருந்ததை கண்டு பயந்து போனோம். இப்பிரிவில் பணம் இல்லாமல் ஒரு வேலையும் நடக்காது ஒரு ஆண் குழந்தை பிறந்தவுடன் 300 ரூபாயும், பெண் குழந்தைக்கு ரூ.250-ம் கப்பம் கட்டினால் தான் பெற்றக் குழந்தையை வெளியில் எடுத்துவர முடியும். தாயும், குழந்தையும் படுக்கையில் இருக்க வேண்டுமென்றால் அதற்கு ரூ.100 கொடுக்க வேண்டும். இம்மருத்துவமனையில் இப்பிரிவிற்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகம். அதனால் வசூலும் அதிகம்!*



எரிக்கப்படாமலேயே கொட்டப்படும் மனித உறுப்புகள்

இந்த பிரிவில் கண்டிப்பாக ஒரு பெண் மருத்துவர் இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான பிரசவத்தை உதவி செவிலியர்களே பார்ப்பதால் சரிவர பிரசவம் பார்க்கப்படாமல் இங்கேயும் அதிகமான இறப்புகள் அநாவசியமாக நிகழுகின்றன.

நாம் மருத்துவமனையை சுற்றி வரும்போதே திண்டிவனம் அருகே நடந்த சாலை விபத்தில் பலியானவர்களை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டிருப்பதை அறிந்து உடனே சவக்கிடங்கு இருக்கும் பகுதிக்கு விரைந்தோம். இங்குள்ள சவக்கிடங்கில் ஒரே நேரத்தில் 4 உடலை மட்டும் வைக்க முடிவதால் ஏற்கெனவே முந்தைய நாள் கொண்டுவரப்பட்ட உடல்களும் அங்கேயே இருந்தன. இதனால் நாம் சென்ற நேரத்தில் வந்திருந்த உடல்களை இடமில்லாமல் ஆங்காங்கே போட்டு வைத்திருந்தனர்.

இச் சவக்கிடங்கில் உடல்களை பாதுகாக்க குளிர்சாதன பெட்டி இருக்க வேண்டும். ஆனால் இவை பழுதடைந்துள்ளதால் உடல்கள் பாதுகாக்கப்படாமல் அழுகி எந்நேரமும் அப்பகுதியில் துர்நாற்றமே வீசிக்கொண்டு இருக்கின்றது.

இதில் பணியாற்றும் முருகேசன் என்ற மருத்துவர் முறையான போஸ்ட்மார்டம் செய்ததாக சரித்திரமே கிடையாது. இவருக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளதால் போலீசுக்கு சாதகமான போஸ்ட்மார்டம் அறிக்கையை கொடுப்பதுதான் இவருடைய வேலை.

போஸ்ட்மார்டம் செய்வதற்கு முன்னர் சோப்பு, வின்டேஜ் என்கிற பிராந்தி பாட்டில், ஆயிரம், இரண்டாயிரம் அழுதால் தான் வேலையே நடக்கும். போஸ்ட்மார்டம் செய்த பிறகு உடலை ஏற்றிச்செல்வதற்கு மருத்துவமனையில் உள்ள சவ ஊர்திக்கு உரிய வாடகை செலுத்திவிட்டு எடுத்துச்செல்லலாம். ஆனால் இந்த சவ ஊர்தி எப்பொழுதுமே ஏதாவதொரு மெக்கானிக் ஷாப்பில்தான் நின்று



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கும். இதற்கான காரணத்தை விவரம் அறிந்த ஒருவர் நம்மிடம் "சர்ஜிகல் டிபார்ட்மெண்டில் வேலை செய்றவங்களுக்கும், வெளியில் தனியார் கார் உரிமையாளர்களுக்கும் ரொம்ப தொடர்புங்க, இங்கு 300 அல்லது 400 ரூபாயில முடிக்க வேண்டியது வெளியில ஒரேடியா 2000, 3000-ம் புடுங்கிடுவாங்க, அதில் இங்குள்ளவர்களுக்கும் கமிஷன்" என நம் காதை கடித்தார்.

இப்பிரிவில் பணியாற்றும் குருராஜ் பராசக்தி என்ற மருத்துவர் ஒழுங்காக போஸ்ட்மார்ட்டம் செய்து சரியான அறிக்கை தயார் செய்கிறார் என்பதும் நம்முடைய விசாரணையில் தெரிய வந்தது.

மருந்து, மாத்திரை வழங்கும் பகுதியில் ஒரே சலசலப்பு. எல்லாருக்கும் ஒரே மாதிரியான மாத்திரைதாங்க கொடுக்கிறாங்க என பலரும் பேசிக்கொண்டு போனது நம் காதுகளில் விழுந்தது. இம் மருத்துவமனையில் முக்கியமான மருந்து மாத்திரைகள் கிடையாது. அப்படியே இருந்தாலும் வசதி படைத்தவர்களுக்கும், மருத்துவமனையில் பணிபுரியும் உறவினர்களுக்கும் மட்டுமே கொடுக்கப்படும்.

நாய்கடி மருந்தின் மதிப்பு ரூ.300 இது பெரும்பாலும் மருத்துவர்களுக்கு வேண்டியப்பட்டவர்களுக்கே கொடுக்கப்படுகின்றது. சமீபத்தில் ஒரு மருத்துவரின் வீட்டிலுள்ள பசுவை நாய் கடித்துவிட்டதாம், இதனால் மருத்துவமனை மருந்தகத்திலிருந்து விலையுயர்ந்த இந்த நாய்கடி மருந்தினை அந்த பசுவிற்கு போட்டுள்ளார் அம்மருத்துவர்.

வெளி மார்க்கெட்டில் அத்தியாவசியமான மருந்துகளை வாங்க அதிகாரம் இருந்தும் அதை பற்றியெல்லாம் முதல்வர் கண்டுகொள்வதே இல்லை. ஏனென்றால், வெளியில் பல தனியார் மருந்து கடைகளோடு தொடர்பிருப்பதால், நோயாளிகள் அங்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கிருந்து சரியாக இவர்களுக்கு கமிஷன் கிடைத்து விடுகின்றது.

இம்மருத்துவமனையில் உள்ள குடும்ப நலப்பகுதி கட்டுப்பாடின்றி கிடக்கின்றது. ஒரு நாளைக்கு சுமார் 30 நபர்கள் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ள வருகின்றனர். ஆனால் இருப்பதோ 22 படுக்கைகள் தான். குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்டவர் குறைந்தது ஒரு வாரமாவது மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு இடநெருக்கடி இருப்பதால் குடும்பக் கட்டுப்பாடு சரிவர செய்வது கிடையாது. *பல குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை தோல்வியிலேயே முடிவடைந்துள்ளது. சமீபத்தில் ஒரு செவிலியருக்கே இந்த கதி நேர்ந்ததால் தனக்கு இழப்பீடாக 4 லட்சம் ரூபாய் தரவேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளார்.*

இரத்த சேமிப்பு கிடங்கும் சரிவர பராமரிப்பது கிடையாது. தேவையான நேரத்திலும் அவசர காலத்திலும் போதுமான இரத்தம் சேமிப்பில் வைத்திருப்பது கிடையாது. இதனால் பல நோயாளிகள் இரத்தம் இல்லாமல் இறப்பதும், அப்படியே இரத்தம் தேவைப்பட்டாலும் பணம் கொடுத்து பெறவேண்டிய நிலையும் உள்ளது.

குழந்தைகள் நலப்பகுதியில் பணிபுரியும் சேகர் என்ற மருத்துவர் குழந்தைகளை தொட்டுக்கூட பார்ப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பலமாகவே எழுந்துள்ளது. நரம்பியல் துறையில் ஒரு நாளைக்கு சுமார் 150 நோயாளிகள் வருகின்றனர். ஆனால் அத்துறையை சார்ந்த சங்கரநாராயணன் அடிக்கடி விடுமுறை எடுத்துக்கொண்டு தன்னுடைய சொந்த மருத்துவமனையிலேயே காலத்தை கழித்து விடுகின்றார் என்று பலரும் நம்மிடம் தெரிவித்தனர்.



மருத்துவர்களின் பொறுப்பின்மையால் 'ஈ' ஆடும் இருதய [illegible]ச்சைப் பிரிவு

சர்க்கரை வியாதி பிரிவும், காசநோய் பிரிவும் மற்ற துறைகளை போலவே சீர்கெட்டு போயுள்ளன. காசநோய் பிரிவிற்கு சரியான மருத்துவரும் கிடையாது. இத்துறையில் பணிபுரியும் கண்ணன் என்ற மருத்துவர், ஆசிரியர்களுக்கு வருமான வரி சான்றிதழ் கொடுப்பதற்கே நேரம் சரியாக இருக்கின்றது. இதனாலேயே வருமான வரி அலுவலகத்தின் மூலம் இவர்மேல் வழக்கு போடப்பட்டுள்ளது.

பணி நேரத்தில் பல மருத்துவர்களும், உதவி மருத்துவர்களும் தங்கள் அறையிலேயே டி.வி பார்த்துக்கொண்டும், சீட்டு விளையாடிக் கொண்டும், பொழுதை கழித்து விடுகின்றார்கள். அதோடு பெரும்பாலான மருத்துவர்கள் தங்களுக்கென்று தனியாக மருத்துவமனைகளை நடத்துவதால், பணி நேரத்திலும் அங்கேயே இருந்து பணம் அள்ளுவதிலேயே குறிக்கோளாக இருக்கின்றனர்.

மக்களுடைய வரிப்பணத்தில் படித்துவிட்டு, ஆயிரக்கணக்கில் ஊதியம் வாங்கிக் கொண்டிருக்கும் இம்மருத்துவர்களால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் ஏழை, தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள்தான் இதை அரசு கவனிக்குமா?

---



படிப்பகம்


www.padippakam.com

திருவண்ணாமலை மாவட்ட தலைவர் அரையாளம் தாஸ் அவர்களின் தலைமையில் நடை பெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட செயலர் ஆர்.மூவேந்தன் முன்னிலை வகித்தார். நிறுவனர் ஐயா எல். யேசுமரியான் அவர்கள் ஒவ்வொரு ஊரிலும் கொடிகளை ஏற்றி எழுச்சியுரை ஆற்றி அனைவரையும் விழிப்புற செய்தார். கிளைகளை துவக்கி கனல் பறக்கும் பேச்சினில் எதிரிகளை கலங்கடித்தார். மாநிலத்தலைவர் ப. அசோகன், மாநில மகளிர் அணி தலைவி செல்வி சிபியரசி, மாநில துணை கொள்கை பரப்பு செயலர் தலித் எம். ஜெயக்குமார், மாநில ஆலோசகர்கள் எம். திருப்பதியான், ப. சீனுவாசன் ஆகி யோர் விளக்கவுரை யாற்றினர். பல்வேறு மாவட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். காலை 8 மணி யளவில் தொடங்கிய இந்நிகழ்ச்சி நள்ளிரவு 2 மணியளவில் ஒரு வரலாற்று நாளாக முடிவடைந்தது.

(தொடர்ச்சி - 18-ம் பக்கம்)



கூடலூர் கிராமத்தில் கொள்கை முழக்கம் செய்கிறார் து.கொ.ப.செ. தலித் எம். ஜெயக்குமார்



கிளை துவக்கி வீரமுழக்கமிடுகிறார் மாநில மகளிரணி தலைவி செல்வி. சிபியரசி



சென்னானந்தல் கிளையை துவக்கி வைத்த மாநில ஆலோசகர் ப. சீனுவாசன்.



தேவிகாபுரத்தில் திமலை மாவட்ட இணை செயலாளர் வி. சுரேஷ் அம்பேத்கர் படம் திறந்த காட்சி.



கூடலூர் கிராமத்தில் விழாவை துவக்கி வைக்கிறார் மாவட்ட மகளிர் அணி தலைவி அற்புதம்மாள்



மாவட்ட இளைஞர் அணி தலைவர் ஓர்து படம் திறந்த காட்சி.



தும்பூர் கிராமத்தில் மாவட்ட மாணவர் அணி தலைவர் எஸ். பழனி படம் திறந்த காட்சி.



ஆரணி நகரில் மாவட்ட பாதுகாப்புப் படை தலைவர் பொன்மணி படம் திறந்த காட்சி.



படிப்பகம்

www.padippakam.com

# சரித்திரம் அழைக்கிறது வாருங்கள்

ஓ தலித் இளைஞனே
சரித்திரத்தில்
நீ இடம் பிடிப்பாயாக
நீ இருக்கும் வரை
உனை பேசாத காலம்
நீ இறந்த பின்னே
பேசுவதே சரித்திரம் ஆகும்.
அந்த சரித்திரத்தை
அடைவதற்காக
உன் மரணத்திற்குப் பிறகும்
உன் லட்சியத்திற்காக
நீ போராடுவாயாக
போ காலமே என்று இல்லாமல்
போர்காலமே என்று இரு
களத்தில் நீ இறங்காத வரை
சுதந்திரத்தில் ல மேல் விழுந்துள்ள
புள்ளி அளவு கூட
நீ காணமாட்டாய்
சமத்துவம் என்ற சொல்லை
பல பத்திரிக்கை
படம் பிடித்து காட்டியிருக்கிறது
நம் கண்களுக்கு!
சமத்துவம் என்ற குரலை
காற்று அழைத்து வந்திருக்கிறது
நம் செவிகளுக்கு!
வாழ்க்கையில் இல்லாததை
வார்த்தையில் மட்டுமே
காண்கின்ற நாம்
சமத்துவம் பெற வேண்டாமா?
சுதந்திரம் நமக்கு சமத்துவம்
நாமே பெறவே
மண்ணை பெறுவோம்
மாண்படைவோம்
மாண்பை காக்க
சேமிப்பு செய்வோம்.
பெண் உரிமையை
பேணி காப்போம்
கல்வி கற்பதை
கட்டாயம் ஆக்குவோம்
தலித் என்று சொல்வோம்
தலை நிமிர்ந்து செல்வோம் - என்ற
ஐந்து பஞ்சம கொள்கைக்காக
நெஞ்சோங்கி நிற்கும்
லட்சியவாதியை
அண்ணல் கண்டெடுத்த
அனையாத போர்விளக்கே
புயலும் உன்வீர வேகத்திடம்
மண்டியிடும் போது
பூ நூல் என்ன
உன் மைறையா புடுங்கிவிடும்
சாதியால் தாழ்த்தப்பட்டாலும்
சாதனையால் உயர்ந்து நிற்கும்
அகில உலக டாக்டர் அம்பேத்கர்
நூற்றாண்டு இயக்கத்தின்
போர்வாள்களே
புறப்படுவீர்
சரித்திரம் அழைக்கிறது
வந்தடைவீர்
உங்களது லட்சியங்களை.

– பஞ்சமர்கவி இரவியரசன்.

அட்டையில் :

*"இனியும் நாங்கள் கொடுமைகளை சகித்துக் கொள்ள மாட்டோம்."*

- இரட்டைமலை சீனிவாசன்
பிறந்தநாள் விழா சூளுரை
ஜூலை - 7

**தொடர்ந்து மக்கள் களம் பெற தாங்கள் சந்தாதாரராய் ஆகிவிடுங்கள்.**
**(சந்தாவை புதுப்பித்து கொள்ளுங்கள்) ஆண்டு சந்தா ரூ.50 மட்டும்.**

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:

**எம்.ஜெ. நாயகம்,** நிர்வாகி, 21டி/1, திருக்கழுகுன்றம் ரோடு, செங்கல்பட்டு - 603 002.



படிப்பகம்

www.padippakam.com

அனையாளம் கிராமத்தில் நிறுவனர் ஐயா எல். வேலாயுதன் கிளை திறந்து மாவட்ட தலைவர் அனையாளம் தாஸ் அவர்களை வாழ்த்திய காட்சி.






கிராம்பனூர் கிராமத்தில் காஞ்சிபுரம் மாவட்ட செயலர் முனிவேல் பா.ம. திறந்த காட்சி.





தலைவாடியில் சிறப்புரையாற்றுகிறார் மாவட்ட செயலர் ஆர். ஏகேந்திரன்







படிப்பகம்

www.padippakam.com



ளை துவக்க விழாவில் முதல் முழக்கமிடுகிறார் காஞ்சி மாவட்ட தலைவர் மதியழகன்



அண்ணலின் படத்தை திறக்கிறார் விழுப்புரம் மாவட்ட செயல தலித் வி. தாஸ் (இடம்: சதுப்பேரிபாளையம்)



ன் களம் செய்தி ஆசிரியர் சிந்தை ராஜன் அண்ணலின் திருவுருவப்படத்தை திறந்த காட்சி. (இடம் : அரும்பலூர்)



போளூர் ஒன்றிய அமைப்பாளர் பாலகிருஷ்ணன் அண்ணலின் திருவுருவப்படத்தை திறந்த காட்சி.



18-06-2000 அன்று நடைபெற்ற அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட பயிற்சி பாசறையில் கொள்கைகளை விளக்குகிறார் மாநில துணை கொள்கை பரப்பு செயலாளர் தலித் எம். ஜெயக்குமார். இப்பாசறையில் நிறுவனர் ஐயா எல். யேசுமரியான், மாநில தலைவர் ப. அசோகன் கருத்துகளை வழங்கினர். இப்பாசறையை மாவட்ட தலைவர் அரையாளம் தாஸ் மற்றும் மாவட்ட செயலர் ஆர். முவேந்தன் ஏற்பாடு செய்திருந்தனர். (இடம் : தச்சாம்பாடி)



படிப்பகம்

www.padippakam.com

## அகில உலக
## டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்

# காஞ்சி மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு

நாள் : 30.07.2000, காலை 9-00 மணி
இடம் : மாமல்லபுரம்

தலைமை
திரு. **எல். மதியழகன்**
காஞ்சி மாவட்டத் தலைவர்

திரு. **ஏ. முனிவேல்**
காஞ்சி மாவட்ட செயலர்



எழுச்சியுரை
தலித் விடிவெள்ளி
வழக்குரைஞர் ஐயா **எல். யேசுமரியான்**
காஞ்சி மாவட்டத் தலைவர்

நிறுவனர்
மக்கள் தளபதி **ப. அசோகன்** மாநில தலைவர்



மக்கள் சேவகர் **எஸ். ஆர். மோகன்**
மாநில பொதுச் செயலாளர்

**மற்றும் மாநில நிர்வாகிகள் எழுச்சியுரையாற்றுகின்றனர்**

**அனைவரும் வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்**

விளம்பர வெளியீடு : மாநாட்டுக் குழு



பார்த்தவை




**யார் இந்த காக்கை கூட்டம்?**

நூல் அஞ்சல்

பெறுநர்

Published by G. GOPINATHAN, 67, Canal Street, Chennai - 600 021. Printed by M. NAVANEETHAN at NAVAJOTHI ACHAGAM, Chennai - 600 002.

படிப்பகம்